## புதுச்சேரி அரசு
## மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுச்சேரி

தேதி 20.11.2020.

## <u>செய்திக்குறிப்பு</u>

இந்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள முறைப்படுத்தப்படாத வைப்புத்திட்டங்களை தடை செய்யும் சட்டம், 2019, 21.02.2019 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. சட்டவிரோத வைப்புத் திட்டங்களால் மக்களை ஏமாற்றப்படுவதிலிருந்து தடுத்து அவர்களின் பணத்தை பாதுகாப்பதே இதன் நோக்கமாகும். இச்சட்டம், தற்போதுள்ள மாநில வைப்புத்தொகையாளர்களின் உரிமை பாதுகாப்புச் சட்டங்களின் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுகிறது. மேலும் இச்சட்டத்தின் மூலம் மோசடி நபர்களின் முறைப்படுத்தப்படாத வைப்புத் திட்டங்களை தடை செய்ய முடியும்.

**<u>இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் :</u>**

- முறைப்படுத்தப்படாத வைப்பு திட்டங்களுக்கு இத்தடை சட்டத்தின்படி **2** ஆண்டுகள் முதல் **7** ஆண்டுகள் வரை சிறை தண்டனை உண்டு.
- ரூபாய் **2** லட்சம் முதல் **10** லட்சம் வரை அபராதம் உண்டு.

முறைப்படுத்தப்படாத வைப்பு திட்டங்கள் தொடர்பான புகார்கள் ஏதும் இருப்பின் சம்மந்தப்பட்ட சார்பு / துணை மாவட்ட ஆட்சியரிடம் புகார் தெரிவிக்கலாம். எனவே பொது மக்கள் அனைவரும் அரசிடம் அனுமதி பெறாத, எவ்வகை முறைப்படுத்தப்படாத வைப்புத் திட்டத்திலும் சேர்ந்து ஏமாற வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(Dr. தி. அருண், இ.ஆ.ப)
செயலர் (வருவாய்) மற்றும்
மாவட்ட ஆட்சியர்
புதுச்சேரி